

# தமிழ் முல்லை





## ஓக்லஹோமா தமிழ்ச் சங்கம்

## 21வது தமிழ்க் கூட்டம்

## ஆண்டுச் சிறப்பு மலர்

அக்டோபர் 03, 2009

தல்சா, ஓக்லஹோமா

Best Wishes
from

XYANT TECHNOLOGY, Inc.
www.xyant.com

# தலைவர் முன்னுரை

தமிழ் நண்பர்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த வணக்கங்கள்!

நமது ஒக்லஹோமா தமிழ் சங்கம் தனது 21-வது வயதில் மகிழ்ச்சியுடன் காலடி எடுத்து வைக்கிறது. இந்த அடையாளசின்னத்தை நமக்கு ஏற்படுத்தி கொடுத்தவர்க்கும் அதை இத்தனை வருடங்களாய் வழி நடத்தி வந்தோர்க்கும் நமது நன்றிகள். தமிழன்னையும் அவர்களை மறக்க மாட்டாள்.

நாம் இருக்கும் இந்த கால கட்டத்தில் ஏதாவது ஒரு வகையில் நம்மை பாதிக்கும் நிறைய நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. வேலை இழப்புகள், பொருளாதார வீழ்ச்சி, இதன் காரணமாய் மன இறுக்கம். இவை எல்லாம் நம்மை சோதனை செய்யும் நிகழ்வுகள். தொலை நோக்கு பார்வையுடன் நமது குறிக்கோள்களை மறு பரீசலனை செய்து கொள்ள இது மிக பெரிய வாய்ப்பு. இத்தருணத்தில் நல்ல முடிவுகளை எடுக்க நம் எல்லோருக்கும் மன தெளிவையும், திடனையும், பொறுமையையும் தர அந்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்வோம்.

இனிய அதிர்ச்சியாய் இந்த வருடம் (ஜூலை-2009) கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் திரு. பரசுராம் அய்யா அவர்களின் வீட்டிற்கு வருகை தந்திருந்தார். நம் தமிழ் குடும்பத்தாரில் நிறையப் பேர் கவிப்பேரரசுவை சந்தித்து தமிழ்ப்பால் பருகி மகிழ்ந்தோம். திரு. பரசுராம் அய்யா அவர்களுக்கு நன்றிகள். இன்னும் நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்த வாழ்த்துக்கள்.

நமக்கிருக்கும் இந்த தமிழன் என்ற அடையாளத்தை அதன் பெருமைகளை நம் சந்ததியருக்கு அறிமுகப்படுத்த வேண்டியது மிக அவசியம். தல்சா நகரில் லக்ஷ்மி பாலகிருஷ்ணன் குழந்தைகளுக்கான தமிழ் கல்வியை முன்னின்று நடத்தி செல்கிறார். பெற்றோரின் பங்கெடுப்பே இந்த முயற்சியின் சாதனைக்கு முதல் காரணம். அவர்கள் இதை சிறப்பாய் நடத்தி செல்ல வாழ்த்துக்கள். இத்தருணத்தில் இந்த முயற்சியை ஆரம்பித்து வைத்த தீர்க்கதரிசி திரு. ஸ்ரீகாந்த் (இப்பொழுது டால்லஸ்-இல் இருக்கிறார்) அவர்களுக்கும் அதன் பிறகு வழி நடத்தி சென்றோர்க்கும் நன்றிகள்.

இந்த முயற்சியை ஒக்லஹோமா நகரில் நடத்தி வரும் திரு. மாசிலாமணி அய்யா அவர்களுக்கும் நன்றிகள் பல. ஆரம்பம் இல்லையானால் இன்று அதன் பெருமையை பேச முடியாது என்பதனால் இந்த முயற்சியை ஒக்ல ஹோமா நகரில் ஆரம்பித்த திருமதி. ராதா பரசுராம் அவர்களுக்கும் தமிழன்னை நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளாள். மொழி மிகப்பெரிய பொக்கிஷம். அதை காப்பாற்றும் பொறுப்பில் இருக்கும் இவர்களுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

தல்சா-வில் இந்த ஆண்டும் தமிழ்-புத்தாண்டை சிறப்பாக கொண்டாடினோம். தல்சா-இந்திய சங்கம் நடத்திய "இந்திய விழா" வில் தமிழ் நாட்டின் "பெட்டிக்கடை" அமைத்து நிறைய பேரின் பழைய நினைவுகளை நினைவுப்படுத்தி வாழ்த்துக்கள் பெற்றோம். இதற்கு உதவிய நண்பர் சுவாமிநாதன் - பிரியா அவர்களுக்கு நன்றிகள்.

இந்த தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு விழாவிற்கு கேட்காமலேயே வாரி வழங்கும் நல்-உள்ளங்கள்

*தொடர்ச்சி அடுத்த பக்கம்*

எப்பொழுதும் போல் இந்த வருடமும் வாரி வழங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் நிறைய செல்வங்கள் சேரட்டும்!

இந்த ஆண்டின் முல்லை மலருக்கான இதழ்களை அலங்கரித்த எழுத்தாளர்களுக்கும்,

ஆதரவாளர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் எத்துனை நன்றிகள் சொன்னாலும் தகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாய் இந்த தமிழ் சங்கத்தை என்னுடன் சேர்ந்து வழி நடத்தி செல்லும் செயற்குழு உறுப்பினர்கள் ரவி சங்கர், குமார் சந்திரசேகர், மீனாட்சி சுந்தரம், பிரேமா நடேசன் அவர்களுக்கு நன்றிகள். திரு. பரசுராம் அய்யா மற்றும் சன்முகமணி அய்யா அவர்களின் அனுபவங்கள்/ அறிவுரைகள் நாங்கள் சங்கத்தை சரியான வழியில் நடத்தி செல்ல உறுதுணையாய் இருந்தது.

எந்தத்துறையில் நீங்கள் இருந்தாலும் சீரும் சிறப்பும், பேரும் புகழும் பெற்று தமிழனென்று பெருமையாய் தரணியில் வளம் வர வாழ்த்துக்கள்.

அய்யப்பன் சுப்பையா
தலைவர்
அக்டோபர் - 03 - 2009

**<u>நம் சங்கத்தின் இனணய தளம்</u>**

நம் சங்கத்தின் நடவடிக்கைகளை இனி இனணயத்தில்
சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

இணைய முகவரி: www.oktamilsangam.org

தளத்தை உருவாக்கித் தந்த நண்பர் திரு. ரவிசங்கருக்கு
பொதுக்குழு சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

# இலக்கியத் துளிகள்

திருமதி. மேரி சூசைமாணிக்கம்

இலக்கியம் என்பது இலக்கை, இலட்சியத்தை நோக்கிச் செல்வது ஆகும். இலக்கியத்தில் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற குறிக்கோளை தமக்குத்தாமே வரைமுறை செய்துகொண்டு வாழ்வதுதான் தமிழரின் வாழ்வியல் ஆகும்.

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் மனம் உருகும்படியான பாடல்களை எழுதி மக்கள் மனதில் இறைஉணர்வை வளர்த்தார். மாணிக்கவாசகரின் திருவாசகத்தை படிக்கும்பொழுது ஏற்படும் இறைஉணர்வை இராமலிங்க அடிகளார் பின்வரும் பாடல் மூலமாக உணர்த்துவதை நாம் அறிந்து மனம் இன்புறலாம்.

"வான்கலந்த மாணிக்கவாசக!
நின்வாசகத்தை நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ்சாற்றினிலே, பால்கலந்து
தேன்கலந்து, செழுங்கனித்தீஞ்சுவை கலந்து
என்ஊன் கலந்து, உயிர்கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே"

தமிழர்கள் இயர்கையோடு இயைந்து வாழ்வு நடத்தினர். கம்பர் தம் இராமயணத்தில் மருதநிலச் சிறப்பை வருணித்துப் பாடியிருப்பதை நாம் காணலாம்.

"தண்டலை மயில்கள் ஆட
        தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க
        குவளை கண்விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்ட
        தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
        மருதம் வீற்றிருக்கு மாதோ!"

இப்பாடலை படிக்கப் படிக்க மனம் இன்புறும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்

குற்றாலமலையின் வளத்தைக் குற்றாலக் குறவஞ்சி என்ற பாடலின் வரிகள் நம்மை அருவிசூழ் குற்றாலத்திற்கே அழைத்துச செல்லும்.

"முழங்கு திரைப்புனலருவி
கலங்கென முத்தாடும்
முற்றம் எங்கும் பரந்து பெண்கள்
சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேன் எடுத்து
வளம் பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து
வெம்புதினை இடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின்
பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் செணபக வாசம்
வானுலகில் வெடிக்கும்."

தமிழர்களின் வாழ்வியல் நூலான திருக்குறளில் வள்ளுவர் வாழ்க்கையின் அடிப்படை, அன்பு கொண்ட உள்ளம் என்பதைப் பின்வரும் பாடல்களால் உணர்த்தியுள்ளார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு"

பாரதியாரின் பாப்பா பாட்டு, குழந்தைகள் மனதில் எளிதாக, இனிதாகப் படித்தவுடன் பொருள் உணரும் வண்ணம் அமைநதுள்ளது.

"ஓடி விளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
ஒரு குழந்தையை வையாதே பாப்பா
சாதிகள் இல்லையடி பாப்பா
குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்"

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கிற்கிணங்க தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டிருக்கும் தமிழர்கள், தமிழ் மொழியின் சிறப்பைச் சங்கம் அமைத்து வளர்ப்பது தமிழ்த்தாய்க்குச் செய்யும் தொண்டாகும். எங்கள் தமிழ் மொழி! எங்கள் தமிழ் மொழி!! என்றென்றும் வாழியவே!!! என்று முழக்கமிடும் நல்ல உள்ளங்களை வாழ்க நீவீர் பல்லாண்டு என வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

"வாழ்க தமிழ்! வளர்க அதன் புகழ்!!"

## நம் வழக்கத்தில் உள்ள பழமொழிகள்.

1. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல.
2. பல நாளைய திருடன் ஒரு நாள் அகப்படுவான்.
3. விலை மோரிலே வெண்ணை எடுத்து தலைமகளுக்கு கல்யாணம் முடித்தானாம்.
4. வெட்டிக் கொண்டு வா என்றால் கட்டிக் கொண்டு வருவான்.
5. வெள்ளாடு நனைகிறதே என்று வேங்கை புலி அழுததாம்.
6. வெள்ளம் வருவதற்கு முன் அணை போட வேண்டும்.
7. வரவுக்கு ஏற்ற செலவு செய்யாதவன் திருவோடு ஏந்தித் தெருவிலே அலைவான்.
8. பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்.
9. புது வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துச் சென்றது போல்.
10. கோழி மிதித்து குஞ்சு முடமாகுமா?
11. கொள்ளிக் கட்டையை கொண்டு தலையை சொறிந்து கொள்வதா?
12. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
13. உள்ளதும் கெட்டதடா நொள்ளைக் கண்ணா.
14. சமயம் வாய்த்தால் சப்பாணியும் மலை ஏறுவான்.
15. காய்ச்சலும் தலைவலியும் தனக்கு வந்தால் தான் தெரியும்.
16. ஊசி போல தொண்டை தாழி போல வயிறு.
17. நிறை குடம் தளும்பாது.
18. குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியும் பறித்ததாம்.
19. நல்ல மரத்திலே புல்லுருவி சேர்ந்தது போல்.
20. தூங்குகிற புலியை உசுப்பி விட்டது போல்.
21. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டது போல்.
22. கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே.
23. கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதா?
24. ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
25. கோழி கூவா விட்டால் போது விடியாதா?

<u>தொகுத்தது:</u>

சரஸ்வதி ராஜசேகரன்

கோயம்புத்தூர், இந்தியா

# மருத்துவ துளிகள்

மருத்துவர் தி.மா.வெங்கட்

இம்முறை நாம் ஃப்ளு ஜுரம் குறித்து சில தகவல்களை பகிர்ந்து கொள்வோம்.

அனைவரும் ஸ்வைன் ஃப்ளு என்ற பன்றி காய்ச்சல் (H1N1) குறித்து மிகவும் பயப்படுகிறார்கள். இது குறித்து சில தகவல்கள் மற்றும் வித்யாசங்கள்.

1. சாதாரண ஃப்ளு குளிர்காலத்தில் வரும் ஸ்வைன் ஃப்ளு ஆண்டு முழுவதும் வரும்.

2. சாதாரண ஃப்ளு 60 வயதிற்கு மேல் உள்ள வயோதிகர்களையும், நுரையீரல் பாதிக்கப்பட்ட நோயாளிகளையும், இளம் குழந்தைகளையும் வெகுவாக பாதிக்கும். ஸ்வைன் ஃப்ளு மற்ற குழந்தைகளையும், இளம் பருவத்தினரையும் (டீனேஜர்ஸ் மற்றும் 30 வயதிற்கும் குறைவானவர்களையும்), நுரையிரல் நோய் உள்ளவர்களையும் மிகவும் பாதிக்கிறது.

3. பன்றி காய்ச்சல் இப்பொழுது அனைத்து மாநிலங்களிலும் (48 States) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

4. பொதுவாக இது சாதரண ஃப்ளுவை விட வலு குறைந்தது. இறப்பவர் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆனால் இது ஆண்டு முழுவதும வரும்.

5. தடுக்கும் முறை:

(அ) கை கழுவுவது மற்றும் பொதுவாக பயன்படுத்தும் பொருட்களை சுத்தமாக வைத்துக் கொள்வது நோய் பரவுவதை தவிர்க்கும்.

(ஆ) Vaccine – தடுப்பு ஊசி: இதற்கு தடுப்பு ஊசி வேறு விதமாக அக்டோபர் 15ல் ஹெல்த் டிபார்மென்ட் மூலமாக கிடைக்கும். இரண்டு ஊசிகள் 6 வார இடைவெளியில் போட்டுக் கொள்ள வேண்டும். குழந்தைகள், இளம் வயதினர், நுரையிரல் நோய் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
Useful Website: www.cdc.gov

(இ) உங்களுக்கு அதிக காய்ச்சல், உடல் வலி, சளி, ஜலதோஷம் முதலியவை இருந்தால் உடனடியாக மருத்துவரிடம் செல்லுங்கள். இதற்கான மருந்து முதல் 24 அல்லது 48 மணி நேரத்திற்குள் எடுத்து கொண்டால் இந்த நோய் சீக்கிரமாக குணமாகும். ஆனால் இதற்கு சாதாரண ஃப்ளு டெஸ்ட் பாஸிடிவ் ஆக இருக்க வேண்டும். வீட்டில் உள்ள அனைவருக்கும் கூட இந்த தடுப்பு மருந்து கொடுக்கலாம்.

# எனக்குப் பிடித்த படம்

தொகுப்பு - ராம்குமார்





*ராம்குமார்*

*பொழுது போக்கிற்கு உதவியாக இருந்தாலும் திரைபடங்களில் சில நம் நெஞ்சில் நின்று நீங்காத இடம் பெற்று விடுகின்றன.*
*தங்களுக்கு பிடித்த திரைப்படத்தை பற்றி சிலர் சொன்னதை இங்கு தொகுத்து வழங்குகிறேன்.*

**லட்சுமி வராகன்**
இனிமையான குரலினால் பக்திப் பரவசமூட்டும் எம்.எஸ். சுப்புலட்சுமி நடித்த "மீரா" அருமையான படம். "காற்றினிலே வரும் கீதம்" பாட்டைக் கேட்கத் திகட்டாது. அதே போல் எம்.கே. தியாகராஜ பாகவதர் பாடி நடித்த திரைப்படம் "சிவ கவி". "அப்பனைப் பாடும் வாயால்" என்று அவர் பாட ஆரம்பித்தால் நாள் முழுதும் கேட்டுக் கொண்டே இருக்கலாம். இந்தப் படங்களில் நடிகர் நடிகையரே பாடுவது ஒரு சிறப்பு அம்சம்.

**மாசிலாமணி, துளசிராமன்:**
சிவாஜி கணேசனின் முதல் படம் "பராசக்தி". கலைஞர் கருணாநிதியின் வசனமும் புரட்சிகரமான கருத்தும், சிறந்த நடிப்பும், இந்தத் திரைப்படத்தை நினைவில் நிற்க வைக்கின்றன.

**ராஜ் ராஜப்பா:**
உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வசனம் அவசியமா? காற்றிற்கும், அலைகளுக்கும், கண்களுக்கும், மொழி இல்லையென்றாலும் எவ்வளவு உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன என்பதை நிலை நிறுத்தும் வகையில் நிறைய வசனம் இல்லாமலே மனம் பேசுவதை அழகாக வெளிப்படுத்தும் சிறந்த திரைப்படம் "மொழி". ஒரு தந்தைக்கும் மகளுக்கும் இடையே உள்ள பாசம், பிரகாஷ் ராஜ் நடிப்பு, இரண்டும் சேர்ந்து படைக்கப்பட்ட இனிய விருந்து "அபியும் நானும்".

**சேகர்:**
8-9 வயதில் பார்த்த "பாவ மன்னிப்பு" அருமையான படம். ஒரு திரைப்படத்தின் வெற்றிக்கு இசை எவ்வளவு முக்கியம் என்று உணர்த்தும் வகையில் தித்திக்கும் "அத்தான் என் அத்தான்", "பாலிருக்கும் பழமிருக்கும்", "காலங்களில் அவள் வசந்தம்", பாடல்களைக் கொண்டது இந்த திரைப்படம். காமெடியில் "பாமா விஜயம்", குணசித்திர நடிப்பிற்கு "கௌரவம்" ஆகிய படங்களும் பிடிக்கும்.

**விமலா சேகர்:**
ஜெயகாந்தனின் கதையில் நடிகை லட்சுமி சிறப்பாக நடித்த படம் "சில நேரங்களில் சில மனிதர்கள்". மிக யதார்த்தமான நடையில் எடுக்கப்பட்டது இந்த திரைப்படம்.

**சாந்தா வராகன்:**
முதன் முதலாக தந்தை அழைத்துச் சென்று பார்த்த முழு நீள வண்ணப் படம் "காதலிக்க நேரமில்லை" பாலையா, (இளைய) நாகேஷ் நகைச்சுவை, "அனுபவம் புதுமை", "என்ன பார்வை", " விஸ்வநாதன் வேலை வேண்டும்" போன்ற பாடல்கள் கொண்டது இந்த திரைப்படம்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம்*

**சங்கர்:**
ஹைதராபாத்தில் வார இறுதியில் தான் தமிழ் திரைபடம் பார்க்க முடியும் (அந்த நாளில்). அப்படி குடும்பத்துடன் சேர்ந்து பார்த்த திரைப்படம் "தில்லானா மோகனாம்பாள்". சிவாஜி கணேசனின் நடிப்பு, பத்மினியின் நாட்டியம், மனோரமா சிரிக்க வைக்கும் ஜில் ஜில் ரமாமணி, மறக்க முடியாது.

**மாதங்கி சங்கர்:**
ரேவதியின் நடிப்பு, நெகிழ வைக்கும் கதை, அமுதமான இசை, மணிரத்னம் எழுதிய வசனம் எல்லம் கொண்ட "மௌன ராகம்" எனக்குப் பிடித்த திரைப்படம். "சோ க்யூட்" கார்த்திக் இந்தப் படத்தின் போனஸ்.

**ஜெயஸ்ரீ சிவகுமார், ஆர்த்தி:**
கர்நாடக இசை மேடையில் தமிழ்ப் பாடல்களை முன்னுக்குக் கொண்டு வரச் செய்த திரைபடம் "சிந்து பைரவி". "பாடறியேன் படிப்பறியேன்" என்று சுஹாசினியும், கர்நாடக இசை வித்வானாக சிவகுமாரும் நன்றாக நடித்திருக்கிறார்கள். "என் மனதில் தமிழ்ப் பாடல்களைக் கற்றுக் கொண்டு பாட வேண்டும் என்ற விருப்பத்தை நிலை நாட்டியதால் இந்தத் திரைப்படம் தன் பேவரைட்" என்கிறார் ஜெயஸ்ரீ சிவகுமார்.

**சிவக்குமார்:**
காட்சிகளுடன் இணைந்த இசை, சத்யராஜ், சரிதாவின் நடிப்பு பாரதிராஜாவின் இயக்கம் கொண்ட "வேதம் புதிது" என்னை மிகவும் பாதித்த திரைபடம். தாயன்பை வெளிப்படுத்தும் சரிதா பல இடங்களில் நெஞ்சைத் தொடுவார்.

**ஆனந்தி மாசிலாமணி:**
ஒருவருக்கு இன்னொருவர் எப்படி விட்டுக் கொடுத்து வாழ்வது என்பதை தெளிவாகக் காண்பிக்கும் திரைப்படம் "ரிதம்". சிறிய வயதினராக இருந்தாலும் "மெட்சூர்" ஆகப் பேசிப் பழகும் அர்ஜுன், மீனாவின் நடிப்பும், ரஹ்மான் இசையில் இனிய பாடல்களும் இந்த படத்தை மீண்டும் பார்க்கத் தூண்டும்.

**பார்த்தசாரதி:**
தங்கவேலுவின் நகைச்சுவை, இனிய பாடல்கள் கொண்ட "கல்யாணப் பரிசு" எனக்குப் பிடித்த திரைபடம்.

**ஜெயந்தி பார்த்தசாரதி:**
கமல்ஹாசன், ஸ்ரீதேவியின் நடிப்பு, பாலு மகேந்திராவின் இயக்கம், இளையராஜாவின் இசை, இவற்றால் மறக்க முடியாத படைப்பு "மூன்றாம் பிறை".

**சுந்தர்:**
டெரரிசம் எவ்வளவு கொடுமையானது என்பதை உணர்த்தும் வண்ணப் படம் "கன்னத்தில் முத்தமிட்டால்". சிம்ரனின் நடிப்பு, இனிய இசை, மனதைத் தொட்டுக் கொண்டே இருக்கும்.

**வள்ளி சுந்தர்:**
சூர்யாவின் நடிப்புத் திறனும், சுழன்று சுழன்று சண்டை போடும் அழகும், சிறந்த பாடல்களும் கொண்ட "அயன்" ரொம்ப பைன்.

**ப்ரியா ரவிசங்கர்:**
தாய்-மகன் அன்பை மனமறியச் செய்யும் பிரபு - சரண்யா நடிப்பில் மனதில் நீங்காத இடம் பெற்ற படம் "பசும்பொன்". இந்த படத்தில் வசனங்கள் மிக அருமை.

*தொடர்ச்சி அடுத்த பக்கம்*

**ரவிசங்கர்:**
இளைஞர்கள் மனது வைத்தால் நிறைய மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்று புதுமுகங்கள் மூலம் சொல்லும் படம் "வானமே எல்லை". சமுதாயம் "ஐடியல்" ஆக இல்லாததைப் பார்த்துத் திகைத்து, கொந்தளித்து, சமூக மாற்றங்களைக் கொண்டு வர முயற்சிக்கும் இளைஞர்கள் பாராட்டத் தக்கவர்.

**அவினாஷ்:**
"கில்லி" படம் மூலம் "கபடி" விளையாடுவது எப்படி என்று கற்றுக் கொண்டேன். விஜய்யின் நடிப்பை மிகவும் ரசித்தேன்.

**அம்ரித் அர்ஜுன்:**
"சிவாஜி" யில் ரஜினி நடிப்பும், டிஷும் டிஷும் சண்டையும் தூள். என் அப்பாவுக்கு பிடித்த படம், அதனால் எனக்கும் பிடித்தது "படையப்பா".

**அசுதோஷ்:**
லிஸ்ட் போட்டு முறையாகக் கெட்டவர்களைக் கொலை செய்யும் ஹீரோ கொண்ட படம் "திருப்பாச்சி". பட்டாஸ் பாலு கேரக்டரை வைத்து பாலு தாத்தாவைக் கேலி செய்ய முடிந்தது.

*இதைப் படிக்கும் போது உங்களுக்கும் பிடித்த திரைப்படங்கள் நினைவுக்கு வரலாம். தமிழ்க் கூட்ட நண்பர்களுடன் அந்த திரைப்படத்தைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள். கதை, பாட்டு, ஓவியம், திரைப்படம், கவிதை என்று எது நமக்கு மகிழ்ச்சி கொடுத்தாலும் அதைப் பிறருடன் பகிர்ந்து கொண்டால் மகிழ்ச்சி பன்மடங்கு ஆகிறதல்லவா?*

## கவிதைத் துளிகள்

**பாசம்**
ஒட்டி பிறப்பதுடன் பிறப்பல்ல பாசம்
ஒட்டி பிறப்பதே உடன்பிறப்பு.

செல்லும் இடமெல்லாம் நானும் செல்வேன் செல் செல் - செல்போன்.
போகும் இடமெல்லாம் போக மாட்டேன் போன் போன்- போன்.

கச்சேரி முடிவுக்கும் "கல்லறை" இறுதிக்கும் "சில்லறை" தேவை.

முந்தானை முடிச்சோடு மூன்று சாவி கொத்தோடு என் முன்னே வந்து நின்றாள் என் மனைவி "சாவித்திரி"

சுனாமியாக வந்த பினாமி பேரலையே! எங்கள் கதி விதி என்றால் சதி செய்த உன் கரைக்கு வர மாட்டோம்-இனி திதி செய்ய.

*கவிதைகள்: பாலகிருஷ்ணன் C.*

# படித்ததில் பிடித்தது

தீபாவளிக்கு இன்னும் எத்தனை நாள் இருக்கிறது என்று நாட்காட்டியில் கை வைத்து எண்ணி, எண்ணி (தப்புத்தப்பாக) மகிழ்ச்சியடைந்த காலம் ஒன்று உண்டு. அப்பா தரப்போகும் பட்டாசுக்காசு, அம்மா செய்யப் போகும் பலகாரம், அப்பா ஆசியின் (வசவு) பேரில் அம்மா எடுத்துத் தரப்போகும் டிராயர் சட்டை இவையெல்லாம் கலர்க்கலர் கனவுகளாய் தூக்கத்தைக் கெடுக்க, மனசெல்லாம் மத்தாப்பாய் மகிழ்ந்த காலம் ஒன்று உண்டு.

சின்னச் சின்ன சந்தோஷங்களாய் சிறகடித்த அந்த மகிழ்ச்சி மலர்கள் இப்போது என்ன ஆயின? எங்கே போயின? இப்போது டப்பா, டப்பாவாகப் பலகாரங் களும் பை, பையாகப் புதுத்துணிகளும் பீரோ, பீரோ வாக நிரம்பி வழிந்தாலும் மனசு மட்டும் நிறைய வில்லையே ஏன்? வளர்ந்து விட்டோமா? எதையோ இழந்து விட்டோமா? இது மாறுதலா? தேய்மானமா அல்லது ஞானோதயமா? கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

எதை அடைய வேண்டும் என்று ஏங்கினோமோ, எது எட்டவில்லை என்று வருந்தினோமோ அது எட்டும் போது சந்தோஷம் மட்டும் கிட்டுவ தில்லையே ஏன்? ஒரே காரணம் மனசு மனசு மனசுதான் அப்போ திருந்த மனோநிலை அப்படி! இப் போதிருக்கும் மனோநிலை இப்படி! கொஞ்சம் விளக்கமாகச் சொல்கிறேன். சட்டென்று விளங்கும்படி ஒரு கதை சொல்கிறேன்.

அரண்மனையில் பணிபுரியும் சாதாரண சேவகர் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்; கலகல என்று சிரித்தபடி கவலைகள் இல்லாதவ ராகக் காரியங்கள் செய்வார். அவரைப் பார்த்த அரசருக்கு ஒரே ஆச்சர்யம். எப்படி இந்த ஏழை இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறான்? இவனுக்கு வருமானமோ குறைவு. வசதிகளும் இல்லை. மிகச்சிறிய வீட்டில் அதிக நபர்களுடன் வாழும் அவலம் அப்படி இருந்தும் இவன் எப்படி மகிழ்ச்சியாக இருக்கிறான் என்று சிந்தித்தார் அரசர். "பிரமாண்டமான அரண்மனை, ஏகப்பட்ட எடுபிடிகள். மிக அதிக வருமானம் இத்தனையும் இருந்தும் நமக்கில்லாத நிம்மதி மகிழ்ச்சி இந்தப் பயலுக்கு எப்படி இருக்க முடியும்?' என்ற எண்ணம் அவரைக் குடைந்தது. ஒருநாள் அவனை அருகில் அழைத்து, "உனக்கு வருத்தமே கிடையாதா? ஏன் இவ் வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாய்?' என்று கேட்டார் அரசர்.

"மேன்மை தங்கிய மன்னரே நான் ஓர் ஏழைக் காவலன். எங்கள் குடும்பத்தின் தேவைகள் மிக மிகக் குறைவு. மழையையும், வெயிலையும் மறைக்க ஒரு கூரை வயிறு நிரம்ப ஏதோ ஓர் உணவு மானம் காக்க ஒரு துணி இதற்கு என் வருமானம் போது மானது. வேறு எந்த ஆசைகளையும் நான் வளர்த்து கொள்வதே இல்லை அதனால், நிம்மதியாக இருக்கிறேன்..' என்று பணிவுடன் கூறினான் சேவகன்; விரக்தியாகச் சிரித்துக் கொண்டார் மன்னர்.

இந்த ஆச்சர்யமான நிகழ்ச்சியைத் தம் அமைச்சரிடம் பகிர்ந்து கொண்ட மன்னர், "இவ்வளவு வருமானம் உள்ள நாம் எப்போதும் கவலையில் இருக்கிறோம். நம்மை விடக் குறைந்த வருமானம் உள்ள அவன் கவலையில்லாமல் இருக்கிறானே! எப்படி இது சாத்தியம்?' என்று பெருமூச்சு விட்டார். "வேண்டு மானால் அவனையும் நமது கவலைப் படுவோர் சங்கத்தில் உறுப்பினராக்கி விடலாம். ரொம்பவும் சுலபம்' என்று பணிவுடன் சிரித்தார் அமைச்சர்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம்*

“அதென்ன கவலைப்படுவோர் சங்கம்?” என்று வியப்புடன் கேட்டார் மன்னர். “அரசே ஒரு பையை எடுக்க வேண்டும். அதில் 99 தங்கக் காசு களைப் போட்டுக் கட்ட வேண்டும். அந்த ஏழையின் வீட்டு வாசற்படியில் வைத்துவிட வேண்டும். பிறகு பாருங்கள் அவனது நடவடிக்கைகளை..” என்று சிரித்தார் அமைச்சர். “அப்படியே செய்யுங்கள்” என்று உத்தரவிட்டார் அரசர். தன் வீட்டு வாசலில் கிடைத்த 99 பொற்காசுகளை ஒரு தடவைக்குப் பல தடவை எண்ணி, எண்ணி மாய்ந்தான் சேவகன். “ஒன்று குறைகிறதே ஒன்று குறைகிறதே..” என்று புலம்பினான். எங்கே போயி ருக்கும் என்று அங்கும் இங்கும் தேடினான். அமைதி போய் விட்டது. தன் வீட்டில் பொற்காசு இருக்கும் விவரம் யாருக்கும் தெரிந்து விடுமோ என்று தடுமாறி னான்.

எப்பாடு பட்டாவது பணம் சேர்த்து, அதை ஒரு தங்கக் காசாக மாற்றி நூறு பொற் காசுகள் என்று முழுமைப் படுத்த வேண்டும் என்கிற வெறி அவனுக்குள் ஏற் பட்டு விட்டது. அவனது கலகலப்பு, நிம்மதி, சந்தோஷம் எல்லாமே அந்த ஒரு தங்கக் காசு பற்றிய கவலைக்குள் கரைந்து போய்விட்டது. அதிகம் உழைத்தான்; பட்டினி கிடந்தான். தன் குடும்பத்தவரை “பொறுப்பற்றவர்கள் ஊதாரிகள்” என்று சப்தம் போட்டான். பரபரப்பும், படபடப்பும் அவனது ஒவ்வொரு செயலிலும், சொல்லிலும் குடியேறி விட்டது! அது அரசருக்குத் தெரிந்தது. அமைச்சர் சொன்னார் “அரசே அவன் நமது 99 சங்க உறுப்பினர் ஆகி விட்டான்..” என்று.

அதாவது, அனுபவிக்க ஏகப்பட்ட விஷயங்கள் இருந்தாலும், கிடைக்கத் தவறிய ஒன்றிற்காகவே ஏங்கும் முட்டாள்களின் உலகம் இது. இந்த மனோநிலை தான் நமது துயரங்களுக்கான முக்கிய காரணம். சந்தோஷப்பட வேண்டிய நேரத்தில் கூட சந்தோஷப்பட முடியாதபடி இந்த மனோபாவம் நம்மைக் கெடுத்து விடுகிறது.

சில கிராமங்களின் வழியாகக் காரில் போகும் போது அங்குள்ள நாய்கள் பாய்ந்து, பாய்ந்து நமது கார்களைத் துரத்தும். இந்தப் பாய்ச்சலால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை; நாய்தான் களைப்படைந்து எச்சில் வழிய நாக்கைத் தொங்கப் போட்டபடி பெருமூச்சு விடப் போகிறது. இதே போலத்தான் வாழ்க்கை முழுவதும் ஏதாவது ஒன்றை நாமும் துரத்திக் கொண்டே இருக்கிறோம். வேக, வேகமாகத் துரத்துகிறோம். பிறகு வருத்தப்பட்டு அமர்ந்து விடுகிறோம். இந்த மனோபாவத்தை மாற்றிக் கொள்ள வேண்டாமோ?

நாற்பது வயது வரை பணம், பணம் என்று உடல் நலத்தை மறந்து உடல் நலத்தை இழந்து துரத்துகிறோம். நாற்பதாகும் போது துரத்திச் சேர்த்த பணத்தை மருத்துவமனைகளில் கொட்டி ஆஹா உடல் நலம், உடல் நலம் என்று துரத்துகிறோம். அதனால் தான் ஒரு காலத்தில் இனித்த வாழ்க்கை மறுகாலத்தில் கசக்கிறது.

சின்ன வயதில் எது கிடைத்தாலும் பெரிய விஷயமாகத் தெரிந்தது. ஒரு கோலிக் குண்டு கூட உலக உருண்டைபோல நமக்குப் பெரிய விஷயமாக இருந்தது. இப்போதோ உலக உருண்டையே கொடுத் தாலும், நமது பேராசைக்கு முன் அது வெறும் லாலிபாப் போல சிறுத்து விடுகிறது. மாற வேண்டிய மனோபாவம் இது. மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால், மறுபடியும் ஒரு குழந்தையைப் போன்ற மனம் நமக்கு வேண்டும். அப்போது தான் அன்றைக்குத் தீபாவளி தித்தித்த மாதிரி இன்றைக்கும் தித்திக்கும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்

ஒரு நரி அதிகாலை எழுந்து மேற்கு நோக்கி வேட்டைக்குப் புறப்பட்டது. கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியில் அதன் நிழல் வெகு நீளமாய் வெகு பிரமாண்டமாய்த் தெரிந்தது. நரிக்கு ஏக குஷி "நான் ரொம்பப் பெரிய ஆளாக்கும். இவ்வளவு பெரிய எனக்குப் பசி தீர வேண்டும் என்றால் குறைந்தபட்சம் ஒரு யானை அல்லது ஒட்டகமாவது கிடைத்தால் தான் கட்டுப்படியாகும்!' என்று ஊளையிட்டது.
கொஞ்சம் சின்ன விலங்குகளை ஏளனத்துடன் அலட்சியப்படுத்தியபடி தன் பசிக்குக் குறைந்தபட்சம் ஒரு யானை, யானை என்றபடி காடு முழுவதும் ஓடிக் கொண்டே இருந்தது. தேடிக் கொண்டே இருந்தது; பாவம், ஒன்றும் கிடைக்கவில்லை. மதியம் தலைக்கு மேலே உச்சியில் சூரியன் வந்தபோது நரியின் நிழல் சிறுத்து அதன் காலடியில் விழுந்திருந்தது.

"ஆஹா பசியால் நாம் எவ்வளவு இளைத்துப் போய்விட்டோம்' சிறுத்து விட்டோம் என்று வருந்தியது நரி. இளைத்துப் போன இந்த அளவுக்கு ஒரு ஆட்டுக் குட்டியோ, கோழியோ கிடைத்தால் கூட போதுமானது என்று தேடியது. ம்ஹூம், பயனில்லை. மாலையில் மேற்கே வந்த சூரியனால் நரியின் நிழல் நரிக்குப் பின்பாக விழுந்தது அதனால், நரிக்குத் தன் நிழலே தெரிய வில்லை.
"ஆஹா.. நாம் வெகுவாக இளைத்து விட்டோம். நாம் இல்லவே இல்லை போலிருக்கிறது ஒரு வேளை இறந்து போய் விட்டோமோ?' என்று பயந்தது. பிறகு, "சச்சி நாம் உயிரோடு தான் இருக்கிறோம். இந்தப் பசிக்கு ஒரு கோழிக்குஞ்சு, ஏன், ஓர் எறும்பு கிடைத்தால் கூட போதும்.."என்று நாக்கைத் தொங்க விட்டபடி தள்ளாடி, தள்ளாடி நடந்தது.

இந்த நரியின் கற்பனை மாதிரி தான் சிலர் தங்களை வெகு பிரமாதமாக எண்ணிக் கொண்டு தங்கள் திருப்திக்கு எதை, எதையோ தேடுகின்றனர். கிடைத்த பல பரிசுகளை ஒதுக்கி விட்டு அலைகின்றனர். முடிவில் ஏதாவது கிடைக்காதா என்று ஏங்கி வாடுகின்றனர். இரண்டும் வேண்டாமே! கிடைத்த 99ஐ புறக்கணித்து விட்டு அதை நூறாக்கப் போராடும் இயல்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.
அனுபவிக்க ஆயிரம் விஷயங்கள் இருந்தாலும் இல்லாத ஒன்றிற்காக ஏங்குவதை விட்டு மாற வேண்டும். காலை நரிபோல் கர்வத்தோடு தேடவும் வேண்டாம்; மாலை நரிபோல் கவலையோடு வாடவும் வேண்டாம். இயல்பாக இருப்போம், ஒரு குழந்தையின் மனதுடன் வாழ்வோம், வாழ்வைக் கொண்டாடு வோம்.

இந்தக் கருத்தை விளங்கிக் கொண்டால் இன்று மட்டுமல்ல, என்றுமே தீபாவளிதான். இதை உணர்ந்து விட்டால் இந்த நாள் ஓர் இனிய நாள்.

--சுரேகா வினோத் குமார்

### தெரியுமா?

சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு லண்டன் இரயில் பெட்டிகளில் 2001 ஆம் ஆண்டு ஜுன் மாதம் காட்சிக்கு வைக்கப்பட்டது.

# கோவில்கள் சில

முன்சுருக்கம்:

உலகிலேயே யுகயுகமாக இருக்கும் கோயில்கள் இந்தியாவில் மட்டும் அதிலும் அநேகமாக தெனிந்தியாவில் உள்ளது. உதாரணமாக ராமேஸ்வ்ரம், கஞ்சீபுரம் வரதராஜ பெருமாள் கோவில். மூவ்வாயிரம் அண்டுகளுக்கு முன்பு தோன்றிய கோயில்கள் 400க்கும் அதிகமாக தமிழ்நாட்டில் உள்ளது. வைஷ்ணவர்கள் போற்றும் 108 திவ்வியஸ்தலங்களில் 90க்கு மேல் தமிழ்நாட்டில் உள்ளது. சைவ கோவில்கள் 300க்கு மேல் உள்ளது. பிரசித்தி பெற்று எல்லோரும் அறிந்திருக்கும் கோயில்கள் குறிப்பிடாமல் சிறிய ஊர்களில் உள்ள சிறப்புள்ள ஆனால் பிரபலமாகாத சில கோவில்கள் மட்டும் கீழே உள்ளன.

1.பட்டீச்சரம்:

இது கும்பகோணத்திலிருந்து தென்மேற்கே 6 கி.மீ தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற காவிரி தென்கரை ஸ்தலம், மூலவர் சுயம்புமூர்த்தி.
சுவாமி பெயர்: பட்டீச்சுரர், தேனுபுரீசுவரர்
அம்பிகை பெயர்: ஞானாம்பிகை, பல்வளை நாயகி
தலவிருட்சம்: வன்னி
தீர்த்தம்: ஞானதீர்த்தம்

"பாடல்மறை சூடல்மதி பல்வளையார்" என்று தொடங்கும் தேவாரப் பாடல் இங்கு திருஞானசம்பந்தர் பாடியது. காமதேனுப் பசுவின் புதல்வி பட்டி பூசித்த தலம். இங்கே அம்பிகை தவம்புரிந்ததால் போனயுகத்தில் இதற்கு "தேவிவனம்" என பெயர் பெற்றிருந்தது. இத்தலத்தில் விசுவாமித்திரர் பிரம்மரிஷி என்ற பட்டம் பெற்றார். திரேதாயுதத்தில் இராமபிரான் பூசித்த தலம். நான்கு கோபுர வாயில்கள் உள்ளன. கிழக்கு நோக்கிய சந்நதி. திருஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தல் அருளிய தலம். அவர் பந்தலில் கீழ்வரும் சிறப்பினை கானும் வகையில் இந்த கோவிலில் 5 நந்திகளை விலகி இருக்குமாறு ஈசன் அருளியதலம். இக்கோவிலில் விநாயகர், முருகன், துர்கை சப்தகன்னியர், ரேனுகாதேவி, மகாலிங்கர், மகாலட்சுமி, ஞானசம்பந்தர், பைரவர், நடராஜர் முதலிய சந்நிதிகள் உள்ளன. இங்கே முருகன் 8 கைகளுடன் வள்ளி, தெய்வானையுடன் காட்சி தருகிறார். அம்பிகைக்கும், பைரவர்க்கும் தனித்தனி சந்நிதி உள்ளது.

2.ஆவூர் பசுபதீச்சரம்

இது கும்பகோணாத்திலிருந்து சுமார் 12 கி.மீ தொலைவில் உள்ளது. ஊர் பெயர் அவூர், கோவில் பெயர் பசுபதீச்சரம். இது கயிலையிலிருந்து பெயர்த்து வந்த சிகரத்தின் மீது மாடக் கோவிலாக உள்ளது. இந்த இடதின் பூர்வீக பெயர் மணிகூடகிரி மற்றும் அசுவத்தவனம்.
சுவாமி: பசுபதீசுவரர், அவுருடையார், அஸ்வத்நாதர்
அம்பிகை: மங்களாம்பிகை, பங்கஜவல்லி
தலவிருட்சம்: அரசமரம்
தீர்த்தம்: பிரம்மதீர்த்தம், அக்கினிதீர்த்தம், சந்திரதீர்த்தம், காம்தேனு தீர்த்தம்

"புண்ணியர் பூதியர் பூதநாதர்" என்று துவங்கும் தேவாரம் இங்கு திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். சங்கபுலவர்கள் ஆவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார் முதலியோர் வாழ்ந்த தலம்.
காமதேனு, பிரம்மன், சப்தரிஷிகள், கணங்கள், தேவர்கள், இயக்கர்கள், கந்தர்வர்கள், இந்திரன்,சூரியன், திருமால், நவகிரகங்கள்,தசரதசக்ரவர்த்தி முதலியோர் வழிப்பட்டு பேறு பெற்ற தலம். இக்கோவிலில் ஏற்றிய வேலவர் தனி சிறப்புடையவர்.

செடிமறைவில் இருந்த லிங்கத்திற்கு காமதேனு தன் பாலால் அபிசேகம் செய்து வந்த தலம். இவ்வழியே வந்த தசரதமகாராஜாவின் தேர் நின்றுவிட்டது. அதன் காரணத்தை தேடும்போது அவர் அறிந்து அந்த லிங்கத்தை எடுத்து பூஜைசெய்து சென்ற இடம். தசரதர் இங்கு செய்த யாகதீயிலிருந்து நெற்றிக்கண் உடைய மங்காளாம்பிகை மற்றும் 8 விதமான காலபைரவர்கள் தோன்றிய தலம். சம்ஹாரபைரவர், பீஷ்னுபைரவர், கபாலபைரவர்,குருபைரவர், உன்மத்தபைரவர், குரோதபைரவர், சண்டபைரவர், அசிதயபைரவர். இங்கு பைரவர் பூஜை விசேசம்.

3.திருவலஞ்சுழி

இது சுவாமி மலைக்கு அருகே உள்ளது, காவிரி தெங்கரைஸ்தலம்.
ஸ்தலவிநாயகர்: வெள்ளை வாரணபிள்ளையார்
சுவாமி: வலஞ்சுழி நாதர், செஞ்சடைநாதர்
அம்பிகை: பிருகந்நாயகி, பெரியநாயகி

தொடர்ச்சி அடுத்த பக்கம்

தலமரம்: வில்வம்
தீர்த்தம்: காவிரி, அரசலாறு, ஜடாதீர்த்தம்

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்று துவங்கும் தேவாரம் இங்கு ஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. திருமால், பிரம்மன், உமாதேவி, ஆதிசோன், இந்திரன் ஏகண்ட முனிவர் முதலீய்யோர் வழ்ல்பட்டு பேறுபெற்ற இடம். திருபாற்கடலை கடையும்போது பல இன்னல்கள் வற்ததால் விநாயகரை வழிபடாமல் தொடங்கியது அறிந்து இந்திரன் கடல் நுரையினால் வெள்ளை விநாயகரை செய்து வழிபட்டார். இந்த விநாயகரும் இந்திரனால் கொடுத்த தங்கமாடமும் இக்கோவிலில் கிழக்கு முகமாக முன்னால் அமைந்துள்ளது.

விநாயகர் சன்னிதிக்கும் பின்னால் கிழக்கு முகமாக சிவபிரான் வலஞ்சுழிநாதர் என்ற பெயருடன் விளங்குகிறார். அம்பாள் திருமணக் கோலத்தில் வலப்பக்கம் உள்ளார். அஷ்டபுஜகாளி சந்நிதியும் உள்ளது. கரிகால சோழன் போருக்கு போகும் முன் அஷ்டபுஜகாளியை பூஜித்து செல்வது வழக்கம்.

காவேரிநதி இந்த இடத்தில் வந்ததும் பூமிக்குள் சென்றது. அதை ஏகண்ட முனிவர் தவம் செய்து காவேரியை மேல வரச்செய்து அது வலம் வந்து சென்றதாகவும் கூறப்படுகிறது. பைரவர், சனீஸ்வரர் மற்றும் வாணிக்கு தனி சந்நதி.

**4.திருநல்லூர்**

கும்பகோணத்திலிருந்து சுமார் 6 கி.மீ ல் நல்லூர் உள்ளது.
சுவாமி: பஞ்சவர்ணேசுவரர், பெரியாண்டேசுவர், கல்யாண சுந்தரேசுவரர்
அம்பிகை: கிரிசுந்தரி,பர்வதசுந்தரி,கல்யாணசுந்தரி
தலமரம்:வில்வம்
தீர்த்தம்: சப்த்தீர்த்தம்

இங்கே "நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்" என்று துவங்கும் தேவாரப்பாடலை திருநாவுக்கரசர் பாடிய தலம். திருஞானசம்பந்தரும் பாடிய தலம்
பிருங்கி முனிவர் வண்டு உருவம் கொண்டு வழிபட்ட தலம். பல முனிவர்கள், தேவர்கள்,குந்தி தேவி, தருமன் முதலியோர் பூஜித்து பேறு பெற்ற் தலம். சுவாமி
கிழக்கு நோக்கியும், அம்பாள் தெற்கு நோக்கியும் அருள் பாலிக்கிறார்கள்.
போட்டியாக ஆதிசேரண் திருகயிலாயத்தை மூடிக்கொள்ள வாயுதேவன் பலத்த காற்று வீசி அந்த சிகரத்தை இரண்டாக பிளந்து வீசியதில் ஒன்று. ஆவுர் மற்றொன்று இது. இம்மலை சிகரமே சுவாமி எழுந்தருள்ளியது. சுந்தரகிரி என்ற பெயரும் உண்டு. சுயம்புலிங்கம். இந்த பஞ்சவர்ணேசுவரர் 6 நாழிகைக்கு ஒருமுறை நிறம் மாறுவர். தாமிரம், சிவப்பு,மஞ்சள், பச்சை மற்றும் மாலையில் நாம் நினைக்கும் நிறத்தில் தோன்றும் அதிசயம் இங்கு தினமும் நடைபெறுகிறது.


**5.திருவிடைமருதூர்:**

இது மயிலாடுதுரை, கும்பகோணம் சாலையில் உள்ளது. காவிரி தெங்கரையில் மூவராலும் பாடல் பெற்ற தலம். மூலவர் சுயம்பு மூர்த்தி.
சுவாமி: மகாலிங்கேசுவரர், மருதவனேசுவரர், மருதவாணர்.
அம்பிகை:பிருக சுந்தரகுஜாம்பிகை, பெரு நலமுலையம்மை
தலமரம்: மருதமரம்
தீர்த்தம்:காருண்ய சமிர்ததீர்த்தம்.
"பூவார் குழலார் அகில் கொண்டு புகைப்ப" என்று துவங்கும் தேவாரம் பாடல், திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட ஸ்தலம். இங்கு வரகுணபாண்டியனுக்கு பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய தலம்.
இக்கோயிலை வலம் வந்தால் பேய், பைத்தியம் விலகும்.இங்கே பாவ விமோசனத்திற்காக 27 நட்சத்திரங்களுடன் வந்து பூஜை செய்த இடம். திருமால், லட்சுமி, காளி, சரஸ்வதி, முருகன், விநாயகர், வசிஷ்டர், அகஸ்தியர், கபிலர், சிவவாக்கியர் முதலானோர் வழிபட்ட தலம்.
ஒருமுறை சிவபிரான் கண்ணனை அம்மன் விளையாட்டாக மூடியபோது உலகமே இருண்டு விட்டது. ஆனால் இந்த திருவிடைமருதூர்: மட்டும் ஜொலித்துக் கொண்டிருந்தது.அதனால் இத்தலம் தேவர்களும் பூஜிக்கும் ஸ்தல்ம் ஆனது.

முடிவுரை:
எத்தனையோ கோவில்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அதை தேவர்களும், ரிஷிகளும் பின் சித்தர்களும், பக்தர்களும் போற்றி வந்தனர்.அதன் பின் காலத்தில் அரசர்களும்,தொண்டர்களும் கோவில் கட்டி தற்போது பக்தர்களாலும், அரசாங்கத்தாலும் பாதுகாத்து திருப்பணி செய்து வருகிறார்கள்.

திருமதி. சுமதி ஜனார்த்தனன்

# தல்சாவில் பெட்டிக் கடை




**UTSAV INDIA FESTIVAL 2009**

*இந்திய விழா (UTSAV-2009) நடந்தது என்னவோ தல்சா-வில் தான். எண்ணங்கள் மட்டும் அவரவர் அனுபவங்களுக்கேற்ற, பாிச்சயப்பட்ட பழைய, இனிய இடங்களுக்கு எடுத்து சென்றது என்பதில் ஐயம் ஏதும் இருக்காது. எாிச்சலை உண்டாக்கும் விமானப்பயணம் இன்றி, எந்த இடத்தில் நான் நிறைய வாழ்க்கை அனுபவங்களை கற்றுக்கொண்டேனோ அந்த இடத்தைத்தான் இந்த பெட்டிக்கடை அடையாளமாய் காண்பித்தது. "என்னடா மாப்ளே... மாசக்கடைசி. மலபார் பீடி போதும்டா..." இந்த மாதிாி பேச்சுக்களை இந்த பெட்டிக்கடையில் கேட்க முடியவில்லை. "என்ன அழகா அப்படியே கொண்டு வந்துட்டாங்க..." இதை பெட்டிகடையை பார்க்க வந்தோர் எல்லோரும் தங்களை ஏதோ ஒரு வழியில் தொடர்பு படுத்திக்கொண்டதை காண முடிந்தது. கடலை மிட்டாய், முறுக்கு, இளநி, தட்டை, ரஸ்தாளி வாழைப் பழம், புதுசா ாிலீஸ் ஆன படத்தோட பாட்டு, சுடச்சுட செய்திகள் - இவைகளை எல்லாம் இந்தப் பெட்டிக் கடையில் பார்க்க முடிந்தது.*

*குறைன்னு சொல்லிகிட்டா - உலகக் கதைகளை உட்கார்ந்து பேச ஒரு நாற்காலி இல்லாதது; "புண் பட்ட மனதை புகை விட்டு ஆத்த" கயறில் தொங்கும் ஒரு தீக்கங்கு இல்லாதது.*

*அய்யப்பன் சுப்பையா*

## உன்னால் முடியும் தம்பி



கவிதைத் துளிகள்

உன்னால் முடியும் தம்பி வாழ்வில்
உணர்ந்ததும் நினைத்ததும் செய்ததும் எல்லாம்
தன்னால் வந்ததே என்று நம்பி
தரணியில் வாழ்ந்திடுவாய் தமிழ்த் தும்பி!
இம்மையும் மறுமையும் எழில்பட வேண்டில்
இனியவே செய்வாய் வேற்றுமை இன்றி!
தம்முடல் தியாகமும் மற்றவர் திண்மையும்
தகர்வோடு காண்போம் சுயநலம் குன்றி!

ஈரடிக் குறளின் இருபொருள் காண்பாய்!
இணையாய் நாலடியார் கருத்தினை உண்பாய்!
ஓரடிக் காலமாய் ஓங்கி நிற்பாய்!
காலடியார் சங்கரரின் தத்துவம் சுவைப்பாய்!
பாரினின் ஊழ்வினை உறுத்து வந்திடும்
பதுமையில் சிலம்பின் பொருள் இணைப்பாய்!
சீரினில் தேவாரம் தெய்வத் திருமறைகள்
சிறந்து கனிவோடு இறையடி இருப்பாய்!

மெய்ஞானம் மனத்திருந்தால் வாய்மை மிளிருமடா!
மென்னையில் விஞ்ஞானம் உறுபொருள் விளக்குமடா!
செய்வதறியா அஞ்ஞான்ம் அடங்கா பேயடா!
செய்வதெல்லாம் விலங்காகும் துன்பம் சேர்க்குமடா!
உய்வதெல்லாம் உயர்வுள்ளல் உத்தமர் சொன்னதடா!
உண்மையில் முத்திதரும் சித்தர்தரும் விளக்கமடா!
தெய்வத்தின் திடுவடிகள் கலங்கரை விளக்கமடா!
தெளிவாகும் பலகோடி வேதாந்தம் சொர்க்கமடா!

நெஞ்சுக்குள் இறைவனை சேர்த்து வாழடா!
நினைப்பதெல்லாம் அவனடி இணைந்த சீரடா!
வஞ்சங்கள் இனிவேண்டாம் வாய்மை கூட்டடா!
வனப்பிலே தருமங்கள் அளித்து மகிழடா!
மிஞ்சிவரும் செல்வமெலாம் கூடாத பேற்றடா!
மிளிரும் வாய்புகழும் ஆவியில் சேராதடா!
தஞ்சமெலாம் இம்மண்ணில் எவர்க்கும் இல்லையடா!
தனிமனிதன் நீதான் எல்லாம் முடியுமடா!

டாக்டர் இரா.ஏகாம்பரம்

## நினைக்காத நேரமில்லை ஸ்ரீரங்கா

கவிதைத் துளிகள்

பல்லவி

நினைக்காத நேரமில்லை ஸ்ரீரங்கா
எனைக்காப்பது உனக்கொன்றும் பாரமில்லை ரங்கா.


சரணம்

சிங்கார நடையழகு சொக்க வைக்கும்
பாங்காக பைந்நாகம் குடை பிடிக்கும்
செங்கோலும் மணிமுடியும் தாங்கி வர
ஹரே ரங்கா, ரங்கேசா எனும் கோஷம் (நினைக்காத)

சூடிய சுடர்க்கொடியின் மலர் ஏற்றாய்
பாடிய பாமாலை தனக்கு வந்தாய்
வாடிய பயிர் கண்ட வான்மழை போல்
நாடிடும் அடியார்கள் துயர் தீர்ப்பாய் (நினைக்காத)

தினம் தினம் திருநாளாம் உனதரங்கம்தனில்
ஜனவெள்ளம் அலைமோதும் இருதரங்கில்
மனமெல்லாம் நிறைந்திட்ட எழிலரங்கா
எனக்குதவ வர ஏனிந்த தாமதம்? (நினைக்காத)

பூலோக வைகுந்தம் ஸ்ரீரங்கம்
மேலோர்கள் சான்றோர்கள் சொன்னார்கள்
நீலோத்பல கண்ணன் வைபோகம் கண்டு
நல்லாரே பல்லாண்டு பாடீரோ! (நினைக்காத)



பல்லவி

விக்ன விநாயகா சரணம் சரணம்
துக்க நிவாரண சரணம் சரணம் (விக்ன )

அனுபல்லவி

பக்தியுடன் உன்னை நித்தம் துதி பாட
சக்தி மைந்தா எனக்கு சகல பலம் தரனும் (விக்ன )


சரணம்

சங்கரன் புதல்வி சங்கடங்கள் தவிர்ப்பாய்
ஓம்கார ரூபனே பாங்காகவே வந்து
சிங்கார வேலனின் சீர்மிகு சோதரா
மங்கள மூர்த்தியே மகிமையுற வருவாய் (விக்ன)

-மீனாட்சி இராமகிருஷ்ணன்

# (ஏ)மாற்றம்

## கவிதைத் துளிகள்



கூரை சாலைக்கு முன்ன, கயிற்று கட்டலின் மேலே
ரெங்கமலை காற்று வாங்க நினைத்த எனக்கு,
நெடுக கட்டிய மச்சு வீடும்,
கொசுவுக்கு சாத்திய ஜன்னலும்,
ஐந்தில் சுற்றிய மின்விசிறியும்,
மாற்றத்தையே உணர்த்தியது!
ஏமாற்றத்தையே தந்தது!!

காபிக்கு பசும்பாலும்,
கரைச்சுக் குடிக்க எருமை தயிறும் எதிர்பார்த்தவனுக்கு,
பாக்கெட்டில் வந்த அபூர்வா பாலும்,
பாக்ஸ்ல் வந்த நீல்கிரீஸ் தயிறும்,
மாற்றத்தையே உணர்த்தியது!
ஏமாற்றத்தையே தந்தது!!

ரோட்டிலே இறங்கி, ஊருக்குள் நடப்பதற்குள்,
உறவெங்கும் ஓடிவந்து, உடல் நலம் விசாரிக்கும்!
உடன் வந்த பெட்டியை வீடு சேர்க்கும்,
உடைந்த சைக்கிளில் முன்னமர்ந்து நான் செல்வதற்குள்!!


இப்போதோ,
தடுக்கி விழுந்தவனை, தரையைப் பார்த்தபடி,
தார் ரோட்டில் ஒதுங்கி செல்கின்றான் தாய் மாமன்,
தான் புதுசாய் வாங்கிய குளுகுளு தகரபெட்டியை ஓட்டிக்கொண்டு!!

கம்பஞ்ச்சோற்றுக்கும், சோளப் பணியாரத்துக்கும்,
தாளம் போடும் நாக்கு-ஏனோ
மேங்கி ஆட்டா நூடுல்சுக்கும், அதிலிருந்த
புரோக்கலிக்கும் மவுனம் பேசியது!!

உலகமே கிராமமாக உருமாறி
உலகமயமாக்குதல் உருவாகி வரும் வேளையில்
ஏனோ எனக்கு
கிராமமோ மாயமாகி
உலகமாயையாகி விட்டதாகவே தோன்றுகிறது.
ஆம்,
என் தமிழக கிராமங்கள்
மாற்றத்தையே உணர்த்தியது!
ஏமாற்றத்தையே தந்தது!!

-குணமொழி ஹரிசங்கர்

# கவிதைத் துளிகள்




## முல்லை

"முல்லை" மலரும் வேளை
முத்தேவியின் அருளும் வேளை
கதிரவன் உதிக்கும் வேளை
காதிலே ஒலிப்பது துதிக்கும் ஒலை
"முல்லை" விரிக்கும் முத்துக்கள்
மும்மூர்த்திகள் அருளிய சொத்துக்கள்
தமிழை தித்திக்க அருளுவது "முல்லை"
தமிழரை முக்திக்கு அருளுவது

## பாசம்

பாசம் என்ற பாலை பறிமாறிய தாய் பரிதவிக்கும் நிலைதான் என்னே
அன்று அவள் ஊட்டியது தாய்பாலனால்
இன்று அவள் உண்பது தரமற்ற பால்
தாயின் மடியில் தவழ்ந்திட்ட நாட்கள்சில
தாயகத்தின் மடியில் தயங்கி நடக்கும் நாட்பற்பல
தாய் வளர்த்த பட்சிதான் அன்னபட்சி
தாரம் வளர்த்த பட்சிதான் தயங்கும் பட்சி
பறவைகளும் பறந்து உண்டு பாசத்துடன் ஊட்டும்
பரிதவிக்கும் தாயும் உண்டு பாசத்துடன் ஊட்டும்
சின்னஞ்சிறு காலால் உதைத்த புண் ஆறிவிட்டது
சினம் கொண்டு உதைக்கும் புண் ஆறவில்லையே
மழலையின் மொழி கேட்டு மகிழ்ந்த நாட்கள் பல
மருமகளின் மொழி கேட்டு நெகிழ்ந்த நாட்கள் சில
அரவணைக்கும் கைகளோ அதற்கு அளவில்லை
ஆனாலும் அந்த கைகள் தன்குழந்தையின் கைகள் அல்லவே
கருவறையில் இடம் கொடுத்த தாயுக்கு
கல்லறையிலாவது இடம் கொடுப்பானா?



## பாட்டியின் புது தாலாட்டு

சின்ன சின்ன ஆசை சிறகடிக்கும் ஆசை
முத்து முத்து ஆசை முத்தமிட ஆசை
தாமரைக் கன்னங்கள் தடவி விட ஆசை
சின்ன சின்ன காலை சீண்டிவிட ஆசை
ஆசையுடன் தொட்டிலை ஆட்டிவிட ஆசை
பட்டு பட்டு ஆசை பட்டு பாவாடை கட்டி பார்க்க ஆசை
முத்து முத்து ஆசை உச்சி முகர்ந்து பார்க்க ஆசை
என்ன இந்த மாயம் எனக்கு மட்டும் தானா
பாட்டியின் ஆசையை பாலு போட்டும் ஆசை
தாத்தாவாய் மாறி தத்தி தத்தி நடக்க வைக்க ஆசை

கவிதைகள்: சுபாஷிணி

## இருட்டு கிரஹத்திலிருந்து ஒரு பயணம்

மிகவும் இருட்டாக இருக்கிறது இவ்விடம், கும்மிருட்டு என்று சொல்வார்களே அது போல! சுற்றிலும் கதகதப்பான நீர், சுவாசிக்க முடிந்தது, ஆக காற்று உள்ளது! ஆனால் வெளிச்சம் தான் இல்லை, எப்போது எப்படி இங்கு வந்தேன் என்று புரியவில்லை. நீரால் மிதந்து வரப்பட்டேனா அல்லது காற்றால் அடித்து வரப்பட்டேனா என்று நினைவில்லை. இது எந்த கிரஹம் என்றே யூகிக்க முடியவில்லை. எனது உருவமோ மிகவும் சிறியதாக இருக்கிறது மேலும் என்னைத் தவிர வேறு யாரும் இங்கு இருப்பதாக தோன்றவில்லை. சுற்றி சுற்றி வந்தாலும் ஒரு பயனும் இருப்பதாக தெரியவில்லை.

இப்படி குருட்டாம்போக்கில் சுற்றும் போதுதான் கவனித்தேன் நீண்ட கயிறு ஒன்று என்னோடு பிணைந்திருப்பதை. அஃது மிகவும் மிருதுவாய், நீளமாய் ஒரு குழாய்ப்போல் தென்பட்டது. எதிர்பாராத நேரத்தில், ஆனால் அடிக்கடி அதிலிருந்து ஏதோ திரவம் கொட்டுகிறது, என்னவென்றே புரியாதபோதும் பசியாற அதையே உணவாக அருந்தி வருகிறேன். சுவை என்னவோ புதுமையாக உள்ளது என்றாலும் அத்திரவம் என்ன வண்ணம் என்றோ என்ன மணம் என்றோ என்னால் அறிய முடியவில்லை. எப்படியோ இந்த இடத்தில் வாழ பழகிக் கொண்டேன்.

காலம் நகர்ந்துள்ளது என்பதை என் உருவத்திலிருந்தே அறிய முடிகிறது. உணவருந்திக் கொண்டு, நீந்திக் கொண்டு, தூங்கிக் கொண்டு என்று ஒரே சீராக நேரம் சென்றது. சமயத்தில் நான் நீந்திக் கொண்டிருக்கும் போது சிறிய ஒளிக்கீற்று என்னை கடந்து சென்றது. தொடர்ந்து இவ்விடம் அதிர்வதையும் உணர்ந்தேன். மேலும் தனிமை வேறு அலுப்பையும் வெறுமையும் தந்து கொண்டிருந்தது... தருகிறது... சமயத்தில் வரும் விநோத சப்தங்கள் வேறு மனதை கலவரப்படுத்துகிறது. ஒன்று மட்டும் நிச்சயம்...! அருகில்தான் ஜிவராசிகள் வசிக்கும் இடம் இருக்க வேண்டும்! அங்கு என்னைப் போல் பலர் இருக்கக் கூடும். அவர்களைப் பார்க்க, அவர்களோடு சேர்ந்திருக்க மணம் மிகவும் ஆசைப்பட்டது, நிச்சயம் அங்கு வெளிச்சம் இருக்க வேண்டும். இங்கிருந்து செல்ல கண்டிப்பாக ஏதோவொரு வழியும் இருக்க வேண்டும், எனவே முன்பை விட மிகவும் நிதானமாகவும் பொறுமையாகவும் பயணத்தை தொடர்ந்தேன். மனதில் மீண்டும் புதிய நம்பிக்கை, ஆர்வம் வெளிச்சத்தை உணர, பார்க்க...

இப்போது மிக அருகில் அச்சத்தம் கேட்கிறது, அந்த சத்தம் கேட்பதற்கு இனிமையாகவே இருந்தது. தூரத்தில் வெளிச்சம் இருப்பதை கவனித்துவிட்டேன்! இப்போது அவ்வெளிச்சத்தை நோக்கி பயணிப்பது சுலபமாகவே இருந்தது. அய்யகோ என்ன இது, இந்த பாதை குறுகலாகிக்கொண்டே வருகிறதே.........?!

மிக மிக அருகில் அந்த ஜீவராசிகள் இருக்க வேண்டும். நான் எழுப்பும் ஒசைப் போலவே அங்கேயும் சில ஒசைகள். ஆக என்னைப் போல்தான் அந்த ஜீவராசிகள் இருக்க வேண்டும்... போகிற போக்கில் என்னால் முடிந்தவரை வழியை ஏற்படுத்திக் கொண்டே வெளிச்சத்தை நோக்கி செல்கிறேன்... ஆச்சரியம் ஆனால் உண்மை, நான் தள்ள தள்ள தடம் அகலமானது. ஆனாலும் எனது உருவத்தால் அப்பாதையில் முழுவதாக பயணிக்க கடினமாகவே இருக்கிறது. ஒலியும் ஒளியும் தரும் நம்பிக்கையில் முட்டி மோதி வளைந்து, நெளிந்து.. ஆ வெளிச்சத்திற்கு வந்தே விட்டேன்...

கண்கள் கூச, ஜில்லென்று புது காற்று வீச "அம்மா" என்று கருவறை கிரஹத்திலிருந்து பூலோகத்திற்கு வந்துவிட்டேன்......!!!

-குணமொழி ஹரிசங்கர்



## நான் வளர்ந்த வீடு

கோவை அருகில் உலியம்பாளயம் என்கிற அழகிய கிராமத்தில் உள்ள என் பாட்டியின் தோட்ட வீடு. சிறு வயதில் நான் ஆறு வருடங்கள் வசித்த வீடு, கரும்புத் தோட்டம், வாழைத் தோட்டம், வயல் வெளிகள் என்று அருமையான சூழல். மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்ததால் தட்பவெப்பம் எப்பொழுதும் இதமாகவே இருக்கும். சிறிய வயதாக இருந்தாலும் நான் இங்கு வசித்த காலத்தை இயற்கை அன்னையின் மடியினில் தவழ்ந்ததாகவே எண்ணி மகிழ்வேன். கோவைக்கு மிக அருகில் இருப்பதால் (14 KMS) துரித நகரமயமாக்கலில் (Rapid Urbanization), மிகக் குறுகிய காலத்திலேயே அழிந்துவிடும் ஆபத்தில் இருக்கிறது இந்த கிராமம். இங்கு அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் பிற கட்டிடங்கள் எழலாம். ஆனால் நான் வாழ்ந்து ரசித்த அந்த இயற்கை சூழல் நம் சந்ததியினருக்கு கிடைக்குமா?

கி. மீனாட்சி சுந்தரம்

தமிழ் செம்மொழி ஆனது நமக்கு தெரியும். அதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்று தெரியுமா?

1.தொன்மை (Antiquity)
2.தனித்தன்மை (Individuality)
3.பொதுமைப் பண்பு (Common Characters)
4.நடுவு நிலைமை (Neutrality)
5.தாய்மைத் தன்மை (Parental Kinship)
6.பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு (Finding expression in the culture art and life experiences of the civilized society)
7.பிறமொழிக் கலப்பில்லாத் தனித்தன்மை (Ability to function independently without any impact or influence of any other language and literature)
8.இலக்கிய வளம் (Literary prowess)
9.உயர்சிந்தனை (Noble ideas and ideals)
10.கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு (Originality in artistic and literary expressions)
11.மொழிக் கோட்பாடு (Linguistic principles)

ஆக செம்மொழிக்கான தகுதி மேல் சொன்ன 11 விதிகளுக்காக வழங்கப்படுகிறது!! உலகில் பழம்பெரும் மொழிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள எந்த ஒரு மொழிக்கும் செம்மொழிக்குரிய 11 தகுதிகளும் முழுமையாக இல்லை.

தமிழுக்கு அத்தனை தகுதிகளும் உள்ளது, என்பது மிகப் பெரிய சிறப்பு.

**தமிழ் செம்மொழி**

# மார்ஸ் பயணம்

**ம**ணி இரவு 7.30 PST.. இன்னும் அரை மணி நேரத்தில் மார்ஸ்ல் இருக்கும் மகனிடம் இருந்து டெலிவீடியோகால் வந்து விடும். என் மனைவி நிஷா டின்னர் செய்துக் கொண்டே அவளுடைய விருப்பமான சீரியலையும் பார்த்துக் கொண்டு, வயர்லெஸ்ஸில் தன்னுடைய வட இந்திய தோழியிடம் தான் போகப் போகும் மார்ஸ் பயணத்தைப் பற்றி சொல்லி கொண்டிருக்கிறாள். *எக்காலத்திலும் இப்பெண்களாள்தான் ஒரே சமயத்தில் பல வேலைகளை செய்ய முடிகிறது.*

**ம**கன் ஷானந்த் (*மனைவி நிஷாவின் பின்பாதி எழுத்து முன்னாடியும், என் பெயர் ஆனந்தின் பின்பாதி எழுத்துக்கள் பின்னாடியும் சேர்ந்து ஷானந்த் ஆகியுள்ளது*) படித்தது உலகத்திலேயே உள்ள மிகச் சிறந்த கல்வி நிறுவனமான MIT-லும் IISc லும்தான். இந்த 26 வயதிற்குள் அவன் ISRO-விலும், NASA விலும் வேலை செய்து விட்டு இந்தியா அமெரிக்கா கூட்டுத் தாயாரிப்பான EARTHOAMERINDIA SPACE STATION-ல் ASTRO CHEMICAL ENGINEER ஆக இப்போது வேலை செய்கிறான். தன்னுடன் வேலைப் பார்த்த ரெக்கா என்பவளை கடந்த அக்டோபரில் திருமணம் செய்து கொண்டான். ஒரு ASIAN-க்கும் EUROPEAN-க்கும் மகளாய் பிறந்து AMERICA-வில் வளர்ந்த அவளை எங்கள் மகன் மணம் செய்ததில் எனக்கு கொஞ்சம் வருத்தம்தான். ஆனால் என் மனைவியோ அவளுடைய பூர்வீக வரலாறை SEARCH ENGINE-ல் கண்டறிந்து சுமார் மூன்று தலைமுறைக்கு முன் அவளுடைய தந்தை வழி பாட்டி தமிழர் என்றும், அவர் இவளுடைய எள்ளுத் தாத்தா ரெங்கசாமியின் ஒன்றுவிட்ட சகோதிரி என்றும் தெரிந்துக் கொண்டாள். ஆகவே தன் மகன் தன் வழி சொந்ததில் திருமணம் செய்துக் கொண்டதில் அவளுக்கு மகிழ்ச்சியே. மேலும் அவள் 12 வது SUNDAY வாக முழுகாமல் இருப்பதில் கொள்ளை ஆனந்தம். சற்று அதிகப்படியாக அலட்டல் என்றே சொல்லாம். இதுவரை மகன் தங்களுக்காக மார்ஸ்ல் வந்து தங்க ஏற்பாடு செய்து இருப்பதையும் அதற்கான preparation அதற்காக அவள் மேற்கொண்ட இன்டெர்வியூகளையும் ஒரு பதினாறு பேரிடமாவது சொல்லி இருப்பாள்.

**நி**ஷா காதில் இருந்த வயர்லெஸ்சை கழற்றிக் கொண்டே டின்னர் ரெடியானதை சொன்னாள். இருவரும் சேர்ந்தே சாப்பிடுவது எங்கள் வீட்டின் விதி.(RULE?!) வழக்கம்.. ஷானந்த் பிறந்தவுடந்தான் இந்த உள் நாட்டு சட்டம் அமலுக்கு வந்தது. சட்டத்தை இயற்றியவள் சாட்சாத் என் சகதர்மினியே ஆவாள்.இப்படி அவள் போட்ட பல உள் நாட்டு சட்டதிட்டங்கள் ஷானந்த் DISCIPLINED ஆக வளர்வதற்கு நன்றாகவே உதவியது. மேலும் எங்களுக்குள் எழுந்த்த கருத்து வேறுபாடுகளை களைந்து மண வாழ்க்கையை ஒரே சீராக செல்லவும் வழி அமைத்தது.அதனால்தான் இந்த மார்ஸ் பயணத்துக்கான் அடிப்படை விதிகளை எங்களால் எளிதாக கடக்க முடிந்தது.ஆம் இந்த பயணத்திற்கான முதல் தகுதியே கணவன் மனைவி திருமணமாகி குறைந்த்த பட்சம் 10 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்த்திருக்க வேண்டும். மேலும் மார்ஸ்சில் இருப்பவர்கள் தங்களுடைய BIOLOGICAL PARENTS-சை மட்டும்தான் அழைக்க முடியும். மேலும் அவர்கள் எவ்விதமான CORONARY PULMONARY HEALTH DISEASES இல்லாமல் இருக்க வேண்டும். இப்படி நாங்கள் DISTINCTION-ல் SCORE செய்ய காரணமாக இருந்தது என் மனைவி இயற்றிய HOME RULES மட்டுமே.

**உ**ணவை பரிமாறிக் கொண்டிருக்கையில், நிஷாவின் தெலுங்குத் தோழியொருத்தி வயர்லெஸ்ஸில் அழைத்தாள். அவள் அடிக்கடி நிஷாவிற்கு போன் செய்து தன் சமயலறை சந்தேங்கள் முதல் தன் மாமியாருக்கு சேலில் (SALE) வாங்கிய கட்லெரிஸ் (CUTLERY) வரை பகிர்ந்து கொள்வாள். ஆனால் நிஷாவோ அவளை தன் கோர்ஸ் மேட் (COURSE MATE) என்றே சொல்லிக் கொல்வாள். ஆம் இருவருக்கும் ஏர்க்ளாஸ் (AIR CLASS) சென்ற போது ஏற்பட்ட பழக்கம். நிஷா தற்போது உணவருந்து -வதாகவும், அடுத்து தன் மகனுடன் பேச இருப்பதால் தன்னால் அவளுடைய கேள்விகளுக்கு விரிவான பதில் சொல்ல முடியாது என்றும், சில பல SEARCH ENGINE பெயர்களை சொல்லி அவளிடம் பேச்சை மிகச் சுருக்கமாக முடித்தாள். இன்னும் 20 நிமிடங்கள் உள்ள நிலையில் நிஷா நிதானமாக அவளுடைய மார்ஸ் இன்ட்டர்வியூக்கான கேள்விகளுக்கு பதில் சொல்லியிருக்க முடியும், கேட்டதற்கு ஷானந்த்தின்

*தொடர்ச்சி அடுத்த பக்கம்*

காதலி(*யாக இருந்த போது*) ரெக்காவை கிண்டல் செய்வது போல் எப்போதோ பேசினாளாம். ஆதலால்தான் இந்த சுற்றல் பதில்களை தான் தந்ததாக நியாப்படுத்தினாள். உண்மைதான் இப்பெண்களுக்கு EQUATIONயை BALANCE செய்ய சொல்லியா தரவேண்டும்?

உணவருந்திக்கொண்டே நான் செய்து முடிக்க வேண்டிய வேலைகளை வரிசைப் படுத்தினாள். நாங்கள் திரும்பி வருவதற்கு இன்னும் 120 ஞாயிறுகள் உள்ளன. ஆம் மார்ஸ்ல் கிழமைகளும்,வாரங்களும் பூமியில் இருப்பதுப் போல் ஒன்றாக இருந்தாலும், சொல்லும் முறையும், எழுதும் முறையும் வேறு. அங்கு தேதியை ஏதோ பார்கோடு போல12 டிஜிட்டில் எழுதுகிறார்கள்.ஹவுஸ் செக்யூரிட்டி, பேங்க் செக்யூரிட்டி, கிரெடிட் கார்டு செக்யூரிட்டி, லாக்கர், வரி விலக்கு என்று என்னுடைய லிஸ்ட்டில் மொத்தம் 20 இருந்தது. அவளுடைய லிஸ்டோ 36ஐ தொட்டது. அதில் மருமகள் ரெக்கா வாங்கி வரசொன்ன ஐயிட்டங்களும் அடங்கி இருந்தது. அதில்லாமல் இவள் தன் மகன், மருமகள், பிறக்கப் போகும் குழந்தையென இன்னொரு லிஸ்ட் வைத்திருந்தாள். அதில் மகன் வேண்டாம் என சொன்ன பல விஷயங்கள் இருந்தன. முக்கியமாக PRINGLES CHIPS... சொன்னால் கேட்க மாட்டாள், அதனால் நான் அதில் தலையிடுவ -தில்லை. அவள் சொல்லும் காரணங்களுக்கு பதில் சொல்ல எனக்கு தெரியாது, எனவே அமைதியாக இருந்து விடுவேன். இப்படி இருப்பதும் எங்கள் திருமண வாழ்வு சீராக செல்ல மற்றொரு முக்கிய காரணம்.

கிச்சனை கிளீன் செய்துவிட்டு சோபாவில் அமர்ந்தேன். மகன் இன்னும் 5 நிமிடத்தில் PING செய்வான், நிஷா டீவீயின் SOURCE சை HDMI ல் இருந்து SAT க்கு மாற்றினாள். ஷான்ந்தின் DATA BYTES RECEIVE ஆகிக் கொண்டிருந்தது, இது PROCESS ஆகி SECURITY CHECK முடிய இன்னும் 3 நிமிடங்களாவது ஆகும். LOGIN SUCESS ஆனவுடன் நமது டெலிபோன் மணிப் போல் ஒரு LONG BEEP கேட்கும்,.... இம் இப்போது LONG RING.. கேட்கிறது..

*"HELLO "* என்கிறாள் மனைவி.

*"என்னங்க எழுந்திரிங்க. மாமா லைனில் இருக்காங்க"* என்று எழுப்பினாள் நிஷா.

*"ஹலோ அப்பா, எப்படிப்பா இருக்கீங்க... பேக்கிங்கெல்லாம் முடிஞ்சாச்சா?*

*ஆமாம் அப்பா,கொஞ்சம் டயர்டா இருந்த்தது. தூங்கிட்டேன்.நிஷாவுக்கு கிச்சன் வாடையே ஆகலைப்பா,அதான் நானே சமைச்சேன்."*- ஆனந்த்


*"இன்னும் 36 மணி நேரம்தானே பொறுத்துக்கோ, அம்மா வந்துடுவா"*-அப்பா

நினைக்கவே மிக சந்தோஷமாக இருந்த்தது, ஆனந்த்துக்கு. கஷ்டப்பட்டு படிக்க வைத்து, தன்னை அமெரிக்கா வரைக்கும் அனுப்பி அழகுப் பார்த்த தன் பெற்றோர்கள் முதன் முறையாக தான் வசிக்கும் பசுமை சியாட்டலுக்கு வருவது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது, அதுவும் தனக்கு பிறக்கப் போகும் ஷானந்தை அவர்கள் வறவேற்க வருவது மிகப் பெரிய உற்சாகத்தை தந்தது.

அதே உற்சாகத்தோடு தொடர்ந்தான். "அப்பா, *அம்மவோட ஊறுகாய் பாட்டிலெல்லாம் மாமாவீட்ல குடுத்துட்டீங்களா?* அந்த -I94ல் இதை......."

-குணமொழி ஹரிசங்கர்

**கல் தோன்றி மண்
தோன்றா காலத்தே முன்
தோன்றிய மூத்த தமிழுக்கு
நாங்களும்
சொந்தக்காரர்கள் தான்.
இச்செந்தமிழை எங்கள்
சந்ததிக்கும்
விட்டுச்செல்லும்
முயற்சியை இனி வரும்
பக்கங்களில் காணலாம்.
தல்சா தமிழ் கல்வி
மாணவர்களின்
படைப்புகள் இதோ...**



# ஆடிப் பண்டிகை

சென்ற வருடம் நாங்கள் கோடை விடுமுறைக்கு இந்தியா சென்றோம். அப்போது ஆடி மாதத்தின் முதல் நாளை திருச்செங்கோட்டில் கொண்டாடினோம்.

தேங்காய்களை நன்கு உரித்து, கரையில், சொரசொரப்பு போகும் வரை தேய்த்தோம். தேங்காய் உடையாமல் பார்த்துக் கொண்டோம். பிறகு தேங்காயில் ஒரு கண்ணை தோண்டி நீரை வெளியே எடுத்தோம். பாட்டி ஊறவைத்த அரிசி பாசிப்பயிறுடன், பொட்டுக்கடலை, எள்ளு மற்றும் சர்க்கரை சேர்த்தார்கள்.


சேர்த்த பூரணத்தை ஒரு புனல் மூலம் தேங்காய்க்குள் போட்டோம். பிறகு ஒரு நீண்ட குச்சியின் ஒரு பக்கத்தை சீவி அதை வைத்து தேங்காய் கண்ணை மூடினோம்.

வீட்டிற்கு பின்புறம் மரக்குச்சி வைத்துத் தீ மூட்டினோம். தீயில் தேங்காயைச் சுட்டோம்.

தேங்காய் ஆறிய பின் சாமிக்கு வைத்து சாத்தா படைத்தார்கள். உடனே நாங்கள் தேங்காயை உடைத்துச் சாப்பிட்டோம் ஆஹா! என்ன ருசி!

இப்படித்தான் நாங்கள் ஆடி ஒன்றைக் கொண்டாடினோம்.

நவீன் வெங்கட்



# குற்றாலம்

குற்றாலம் என்றாலே நினைவிற்கு வருவது தென்றல்காற்றும் அருவிகளும். கடந்த வருடம் நான் விடுமுறைக்கு இந்தியா சென்றபோது என் பெற்றோருடனும் உறவினருடனும் நான் குற்றாலம் சென்றேன். அருவிகளால் சூழப்பட்ட குற்றாலம் பச்சைப்பசேலென்ற அடர்ந்த மரங்களாலும் கண்களுக்கு குளிர்ச்சியாகவும் மனதிற்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது. குற்றாலத்தின் அருவி நீர் மூலிகைக் குணம் வாய்ந்தது.


என் மனதில் நீங்கா இடம் பிடித்த குற்றாலத்தின் அழகைச் சொல்லிக் கொண்டே போகலாம்!!

